# மண்முனை தெற்கு எருவில் பற்று பிரதேசசபை

## மட்டக்களப்பு மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களின் சமர்ப்பிப்பு

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 மே 06 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 யூன் 05 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 யூன் 20 இல் சபையின் தலைவரிற்கு வழங்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப் பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய மண்முனை தெற்கு எருவில் பற்று பிரதேச சபையானது 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்குப் பதிவேடுகளைப் பேணியிருந்ததுடன் என்னுடைய அறிக்கையுடன் தொடர்புபட்ட விடயங்களினால் நிதிக் கூற்றுக்களில் எற்படும் தாக்கங்களைத்தவிர பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு அமைய மண்முனை மண்முனை தெற்கு எருவில் பற்று பிரதேச சபையின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைவரத்தையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் செயற்பாட்டின் நிதிசார் விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 172(2) ஆம் பிரிவின்படி கணக்காய்வுக் கட்டணங்களிற்கான ஏற்பாடு நிதிக் கூற்றுக்களில் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிலையான சொத்துக்களின் மீளமைப்பு ஒதுக்கம் நிதிக் கூற்றுக்களில் செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் போது நன்கொடைகளாக பெறப்பட்ட பொருட்களின் பெறுமதி நிதிக் கூற்றுக்களிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.